034358
17 JUL 2009
40864/08
135
TP4
DD(TP)

<u>சுருக்கம்</u>

பாதாள சாக்கடைத் திட்டம் – திருவாரூர் நகராட்சி – கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க சந்திரவிளாகம் கிராம புல எண்கள் 15/7 மற்றும் மற்றும் 375/1–ல் முறையே 6456 மற்றும் 10848 சதுர அடி நிலங்கள் கிரையம் பெறப்பட்டது – பின்னேற்பு அளித்து ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.3) துறை

அரசாணை (நிலை) எண். 125 நாள்: 16.07.2009

திருவள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 32

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.115, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 6.10.2006.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.40864/ 2008/ டிபி4, நாள் 13.6.2009.

---

<u>ஆணை:</u>

முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் இன்ன பிறவற்றோடு, தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் பாதாள சாக்கடை திட்டத்திற்கான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கழிவு நீரேற்று நிலையம் முதலியவைகளை அமைப்பதற்குத் தேவையான நிலங்களை கையகப்படுத்தும் பணியில் தனியார் உடன்படிக்கையில் நிலங்களை கையகப்படுத்தும் போது அரசு வழிகாட்டு மதிப்புக்கு 150 சதவீதம் குறையாமல் உடன் விலை இருக்க வேண்டும் என ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

2. இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் நகராட்சி நிர்வாக இயக்குநர் மேற்குறித்த அரசாணைப்படி பின்வரும் தனியார் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

| கழிவு நீரேற்று நிலையம் | இடம் விவரம் | சார் பதிவாளர் வழிகாட்டு மதிப்பு (ஒரு சதுர அடிக்கு) | தொகை | நகர்மன்ற தீர்மானம் |
|---|---|---|---|---|
| கழிவு நீரேற்று நிலையம் I (Pumping Station I) | சந்திர விளாகம் கிராம புல எண். 15/7ல் 600 சதுர மீட்டர் (6456 ச.அடி) நில உரிமையாளர் திரு.ராஜேந்திரன், த/பெ.சீனுவாசன் | சார் பதிவாளர் – வழிகாட்டு மதிப்பு (ஒரு சதுர அடிக்கு) ரூ.100.37 150 சதவீத விலை ரூ.150.55 | 6456 ச.அடி ரூ. 150.55 வீதம் தொகை ரூ. 971951/– (புத்திர பதிவு மதிப்பு ரூ.9,72,000/–) மற்றும் 9 சதவீத பதிவு கட்டணம் ரூ.87476/– மொத்த தொகை ரூ.1059427/– | நகர்மன்ற தீர்மானம் எண்.832 நாள் 30.10.08. |

| | | | | |
|---|---|---|---|---|
| கழிவு நீரேற்று நிலையம் II (Pumping Station II) | சுந்திர விளாகம் கிராம புல எண். 375/1ல் 1008 சதுர மீட்டர் (10846 சஅடி) நில உரிமையாளர் தலைவர் மைலியம்மன் கிராம பொது நல சங்கம் | சார் பதிவாளர் – வழிகாட்டு மதிப்பு (ஒரு சதுர அடிக்கு) ரூ.120.35, 150 சதவீத விலை ரூ.180.52 | 10846 ச.அடி ரூ.180.52 விதம் தொகை ரூ.1957920/– (பத்திர சொத்து மதிப்பு ரூ.19,57,330) மற்றும் 9 சதவீத பதிவு கட்டணம் ரூ.176213/– மொத்த தொகை ரூ.2134133/– | நகர்மன்ற தீர்மானம் எண்.833 நாள் 30.10.08. |

4. மேலும் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 29.9.2008 மற்றும் 6.10.2008–ல் நடந்த கூட்ட நடவடிக்கையின்படி கழிவு நீர் உந்து நிலையம் –1 அமைக்க உள்ள புல எண்.15/7–ல் 0.148 ஏக்கர் நிலம் மற்றும் கழிவு நீர் உந்து நிலையம்– 2 அமைக்க உள்ள புல எண்.375/1–ல் 0.248 ஏக்கர் நிலத்தினை முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி சார் பதிவாளர் அலுவலக வழிகாட்டி மதிப்பில் 150 சதவீதம் விலையில் வாங்க மாவட்ட ஆட்சியரால் அறிவுறுத்தப்பட்டு நிலம் கிரையம் பெறப்பட்டதால் இதனை பின்னேற்பு செய்ய நகராட்சி ஆணையர், திருவாரூர் கோரியுள்ளதாகவும் மேற்படி கிரையம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருவாரூர் அவர்கள் அறிவுரைப்படியும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலான கூட்ட நடவடிக்கையின்படியுமே நகராட்சி ஆணையர், திருவாரூர் அவர்களால் பெறப்பட்டுள்ளதால் பின்னேற்பு வழங்குமாறு நகராட்சி ஆணையர் திருவாரூர் பிரேரணையை அரசுக்கு பரிந்துரை செய்து மேலனுப்பியுள்ளார்.

5. இந்நேர்விற்கு திருவாரூர் நகராட்சியும் தனது தீர்மான எண்கள் 832, 833 நாள் 30.10.2008–ல் அனுமதி அளித்துள்ளது. எனவே நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவை நன்கு பரிசீலித்தபின், திருவாரூர் நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்கென கழிவு நீர் உந்து நிலையம் அமைக்க சுந்திரவிளாகம் கிராம புல எண்கள் 15/7 மற்றும் 375/1ல் முறையே 6456 மற்றும் 10846 சதுர அடி நிலங்களை முறையே ரூ.10,59,427/– மற்றும் ரூ.21,34,133/–க்கு திருவாரூர் நகராட்சிக்கு நிலங்கள் கிரையம் பெறப்பட்டதற்கு பின்னேற்பு அளித்து அரசு ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–600 005.
நகராட்சி ஆணையாளர்,
திருவாரூர் நகராட்சி, திருவாரூர், திருவாரூர் மாவட்டம்
மாவட்ட ஆட்சித் தலைவர், திருவாரூர் மாவட்டம்.
சம்பள கணக்கு அலுவலகம்,(கிழக்கு), சென்னை– 600 005.
மாநில கணக்காயர், சென்னை–600 0018.
மாநில கணக்காயர், சென்னை–600 018. (பெயர் உறையில்)
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காய்வுத் துறை தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நகல்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை– 600 009.
இ.கோ / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16/7/09
பிரிவு அலுவலர்.